தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஹூ பங்குனி மீ 12உ (25-3-'23.) | ப. 46.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 465
2. எறிபத்த நாயனார் ... 466
[துகளன்.]
3. உப்பின் மகிமை ... 467
வட இந்தியாவிலுள்ள சில
4. புண்ய க்ஷேத்திரங்கள் ... 468
[K. R. R. சாஸ்திரி, M. A., F. R. Econ's.]
5. புயற் காற்று ... 469
[V. நாராயணையர், M.A., M.L.,]

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.
சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
$\frac{1}{2}$-வருஷம் ரூ. 3 0 0	$\frac{1}{2}$-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

இந்திய சட்ட சபைக் கூட்டத்தில் உப்பு வரியை உயர்த்துவதாக சர்க்காரால் கொண்டு வந்த தீர்மானத்தை விலக்க ஸ்ரீமான் தி. ரங்காசாரியார் அவர்கள் கொண்டு வந்த பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது, இப்பொழுது உப்புக்கு மணுக்கு ரூபா 1-4-0 வரி போட்டு வருகிறார்கள். வெகு காலமாக, உப்பு வரியே போடுவது கூடாது என்று காங்கரஸ் சபையார் வற்புறுத்தி வந்தனர். உப்பு இந்திய ஜனங்களுக்கு, ஏழை பணக்காரர் எல்லோருக்கும், அவசியம் வேண்டியதான உணவு பதார்த்தம். அதற்கு வரிபோட்டு அதின் விலையை உயர்த்துதல் சரியல்ல; பொது ஜனங்களுக்குக் கஷ்டமாக முடியும்; நாட்டு ஜனங்களுக்கு சர்க்கார் மேல் அதிருப்தி ஏற்படவும் கூடும்; உப்பின்மேல் வரி போடுவது வரி போடும் முறைகளுக்கு முரண்படுவதாகும் என்று பலர் ஆக்ஷேபித்தார்கள். சென்ற வருஷமும் இப்பொழுது போல் உப்பு வரியை இரட்டித்து மணுவுக்கு ரூபா 2-8-0 என்று வரி போடுவதாய் சர்க்கார் உத்தேசித்த போது இந்திய சட்ட சபையார் ஆக்ஷேபித்தனர்; அதனால் வரி உயர்த்தப்படவில்லை. ஆயினும், இந்த வருஷச் செலவிற்கு வேறு வரிகள் போதாது; உப்பு வரியையும் உயர்த்துவதைத் தவிர வேறு கதி யொன்றுமில்லை, என்பது சர்க்காரின் அபிப்பிராயமாதலால் இராஜப்பிரதிநிதியவர்கள் கொண்ட சட்டசபை ஆக்ஷேபித்த போதும் வரியை உயர்த்தச் செய்வார்கள்போல் தோன்றுகிறது. ஆகையால், அப்படி இராஜப்பிரதிநிதியவர்கள் தீர்மானிக்குமுன் அவ்விதம் செய்வதால் ஜனங்களுக்கு உண்டாகும் கஷ்டங்களை ஆலோசிக்கச் செய்ய வேண்டும்.

* * *

இளவரசர் அவர்கள் இந்தியாவுக்கு வந்தபோது அவர் ரயிலில் போவதற்காகச் செய்யப்பட்ட வண்டிகள் சுமார் $9\frac{1}{4}$ லக்ஷ ரூபாய் ஆயிற்றாம்.

* * *

ஜர்மனி நாட்டைச் சேர்ந்திருந்த 'ரயின்' நதிப்பிரதேசத்தை தங்களுடைய நாட்டுடன் சேர்த்துக் கொள்ள பிரான்சுக்காரர் ஆசைப்படவில்லை யென்றும், அவர்கள் வேண்டுவதெல்லாம் ஜர்மனிக்குக் கீழ்படாது தனி நாடாய் குடியரசுள்ள பிரதேசமாகுதலே அவர்களுக்கு இஷ்டமென்றும் பிரான்சு தேசத்து மந்திரியாயிருந்த 'லோஷியர்' (M, Loucheur) என்பவர் வெளியிட்டனர்.

* * *

சென்ற ஞாயிற்றுக்கிழமை கல்கத்தாவில் மகாத்மா காந்தியைக் கொண்டாடும்போது கல்கத்தா போலீசார் சுமார் 50 வாலண்டியர்களை பயமுறுத்தினார்கள்; வழியை தடுத்தார்கள்; கடைகளின் வியாபாரத்தைத் தடுத்தார்கள் என்று கைது செய்ததில் சுமார் 30 பேர்களுக்கு சிறைவாஸமும் மற்றவர்களுக்கு சொல்ப அபராதங்களும் விதிக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரகரிக்கப்பட்டது.

காந்தித் திருநாள் சென்னையில் சரிவர நடந்தேறிற்று; எல்லாக் கடைகளும் ஹோட்டல்களும் மூடப்பட்டன; ஞாயிற்றுக் கிழமையும், தெலுங்கு வருஷப் பிறப்பும் அன்று சேர்ந்ததால், காலை முதல் தெருக்களில் பஜனையும், கோலாஹலமுமாய் இருந்தது; வீடு வீடாய் வாலண்டியர்கள் சென்று திலக ஸ்வராஜ்ஜிய நிதிக்குப் பணம் சேகரித்தனர். அநேகரை காங்கிரஸ் மெம்பர்களாக்கினர்; சாயங்காலம் 3 மணிக்கே ஜனக்கூட்டம் திருவல்லிக்கேணி கடற்கரை யோரத்தில் கூட ஆரம்பித்தது. 5 மணி சுமாருக்கு உபந்நியாச மேடைகள் நான்கின் அருகிலும் கூட்டம் நிரம்பிற்று. 'சுதேசமித்திரன்' பத்திராதிபர் அரங்கசாமி ஐயங்கார், ராமதாஸ் பந்துலு, ஹரிசர்வோத்தமராவ், ஷாபி மகம்மது, என். எஸ். வரதாசாரியார் முதலிய ஸ்ரீமான்கள் ஒரு மேடையிலும், எம். கே. ஆசாரியார், சுப்பிரமணிய செட்டியார், கே. பாஷ்யம் ஐயங்கார் முதலிய ஸ்ரீமான்கள் மற்றொரு மேடையிலும், தி. பிரகாசம், தண்டபாணி பிள்ளை, அ. ரங்கைய நாயுடு முதலிய ஸ்ரீமான்கள் மூன்றாவது மேடையிலும், நான்காவது மேடையில் ஹிந்துஸ்தானியில் பல பிரமுகர்களும் பேசினார்களாம். யாதொருவித அசம்பவாதங்களும் உண்டாகாமல் ஜனங்கள் அமர்ந்து நடந்தது மெச்சத்தக்கதே.

* * * *

மலையாளத்தில் சமீபத்தில்நடந்த கலகத்தின் பலனாக சில 'மாப்பிள்ளை' துலுக்கர்கள் கடுந்தண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களுடைய மனைவி மக்களையும் அங்கே அனுப்ப சர்க்கார் முயற்சிக்கிறார்கள் என்ற ஒரு கூக்குரல் கிளம்பியதின் பேரில், மலையாள கலெக்டர் அவர்கள் விஷயத்தை விளங்கக்காட்டும் விளம்பரம் ஒன்று பதிப்பித்தனர். சென்ற அக்டோபர் மாதத்தில் சென்னை கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அந்தமான் தீவில் கைதிகளான மாப்பிள்ளைமார்களைப்பற்றித் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்களாம். இந்தியா கவர்ன்மெண்டார் அதை அந்தமான் தீவு கமிஷனருக்கு அனுப்பினாராம். கைதிகளுக்கு இந்த விஷயத்தை விளங்கச் சொல்ல ஒரு டிபுடி தாசில்தாரும் இங்கிருந்து அனுப்பப்பட்டார். அதின் பலனாக, சுமார் 120 கைதிகள் தங்கள் மனைவிமார்களின் மேல் விலாசத்தைத் தெரிவித்தனர். அந்த ஸ்திரீகளுக்கு விஷயத்தை விளங்கச் சொல்லி அப்படிப் புறப்பட்டுப் போவதால் தங்களுக்கும் தங்கள் கணவர்களுக்கும் உண்டாகும் நன்மைகளை எடுத்துக் காட்டவே, மார்ச்சு மாதத்தில் 5 ஸ்திரீகளும், 17 குழந்தைகளும் அந்தமானுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். இன்னும் 40 ஸ்திரீகள் போக சம்மதித்திருக்கிறார்களாம். இவர்களுக்கு உதவ பிரத்யேகமாய் ஒரு மலையாளி உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பட்டிருக்கிறாராம். ஆகவே, இது விஷயமாய் ஜனங்கள் ஆக்ஷேபிக்க இடமில்லை என்று கலெக்டர் அவர்கள் விளம்பரத்தினின்றும் விளங்குகிறது.

எறிபத்த நாயனார்.

ஊர்மதின் மூன்றட்ட வுத்தமர்க் கென்றேருயர் தவத்தோன்
றூர்மலர் கொய்யா வருபவன் றண்டின் மலர்பறித்த
வூர்மலை மேற் கொளும் பாகருட றுணி யார்க்குமவ
னெர்மலி மாமதில்சூழ் கருவூரி லெறிபத்தனே

—திருத் தொண்டர் திருவந்தாதி

அநபாய சோழன் மரபில் வந்த மாநகராம் கருவூரிலுள்ள ஆநிலையென்ற அரன் கோயிலை வழிபடும் தொழிலராகி அருட் பெருந்தொண்டு செய்து வந்தார் எறிபத்த நாயனார். அவ்வூரிலே சிவகாமியாண்டார் என்ற ஒரு வயோதிகப் பிராமணர் வைகறையுணர்ந்து, போந்து, புனலில் மூழ்கி, வாயுங்கட்டி, மொய்மலர் நெருங்கு வாசச் சந்தன வனத்துக்குச் சென்று மலர்கொய்து கோலப்பூங்கூடைதன்னை நிறைத்துக் கொண்டு ஆநிலையுறையும் சிவனாருக்கு மாலையாகப் புனைந்து அலங்கரிப்பது வழக்கம். வழக்கப்படி யொருநாள் மாலைபுனைய வெடுத்த பூங்கூடையுடனும் தண்டுடனும் கோயிலைநோக்கிச் செல்லும்போது, சோழராஜனின் போர்யானை யொன்று சிவகாமியாண்டாரைப் பின்சென்று துரத்தி பூங்கூடையைப் பிடித்துப் பறித்துச் சிந்தியது. அப்போது, அவர் மெய்பதைத்து யானையைத்தண்டு கொண்டு அடிக்க முயன்றும், மூப்பால் அதைப்பின் தொடரக்கூடாமல் ''ஆறும் மதியும் அணியும் சடைமேல் ஏறும் மலரைக் கரிசிந்துவதோ?'' என்று துக்கித்தார். அப்படித் துக்கித்த கிழவனாரை எதிரிற் கண்ட எறிபத்தர் அச்சொற்கேட்டு கோபம்மூள நெருப்புயிர்த்து, ''அந்த யானை எங்குற்றது?'' என்று கேட்டுக்கொண்டே சிங்கம்போல் அதன்பின் சீறிச் சென்றார்; யானையும் அவர்மேற் சீறிப்பாய்ந்தது; ஆயினும் அன்பர்க்கச்சம் உண்டாமோ? மழுவால் இருதுண்டாகத் துணித்தனர் யானையின் தும்பிக் கையை; உடனே அது அலறிக் கீழேவிழ, யானைப்பாகரும், யானைமீதிருந்த வீரரும் அடியாரை எதிர்த்து வரவே, அவர்களையும் கீழே வீழ்த்தினார் எறிபத்தர். பட்டயானை வீழ்ந்த செய்தியைக்கேட்ட சோழராஜன் சீற்றத்தினால் மெய்ம்மறந்து ''யார் செய்தார்'' என்றும் கேளாமல் தேரேறி படையாட்களுடன் புறப்பட்டு யானை கிடந்த வீதியை நோக்கி வந்தான்; வந்து, யானையின் பக்கல் நின்ற அடியாரையும் கவனியாமல், ''யானையைக் கொன்றவர் யார்?'' என்று கோபக் குரலில்கேட்க, இதோ மழுத்தாங்கி நிற்கின்றாரே இவர்தாம் என்றார்கள். நீதி வழுவாத சோழன் ''இவர் அடியார் அன்றோ? பிழைபட்டால் அல்லாது இவர் கொல்லமாட்டார். யானை யாது பிழை செய்ததோ?'' என்று கேட்டுக்கொண்டே படையாட்களைப் போகச்சொல்லிவிட்டு, தேரினின்றும் இழிந்து அன்பர் முன் தொழுது நின்று ''ஈது அறிந்திலேன் அடியேன்; அங்கு கேட்டது வேறு; அதனால் வெகுண்டு வந்தேன்! என்னை மன்னித்து யானைசெய்த குற்றத்திற்குப் பாகரோடு அதனைக் கொன்றது போதுமோ? வேறு தண்டனை ஏதேனும் நான் விதிக்கக்கடவனோ?'' என்று எறிபத்தரை வேண்டி நிற்க, அவர் நடந்தவற்றை அரசனுக்கு அறிவித்தார்; உண்மையை அறிந்த அரசன் ''பேரபராதமன்றோ இது? இதற்கு இந்த தண்டனை போதாது! என்னையும் கொல்லவேண்டும்'' என்று தன் உடைவாளை அடியாரிடம் நீட்ட அவர் அதைவாங்கி ''ஐயோ, இவ்வித மன்னனுடைய போர் யானையைக்கொன்று தீங்கிழைத்

தேனே!" என்று தன் கழுத்திலே வாளை பூட்டயத்தனிக்க, சோழன் அதைத்தடுக்க, இது எப்படி முடியுமோ என்று எல்லோரும் கண்டு திகைத்து நிற்க, "எறிபத்தருடைய தொண்டின் சிறப்பை விளக்கவே அரனார் இன்று யானையைக் கொண்டு மலர்களைச் சிந்துவித்தார்" என்று ஒரு அருள் வாக்கு வானத்தில் எழுந்தது; வீழ்த்தப்பட்ட பாகரும் போர்வீரரும் எழுந்தார்கள்; யானையும் எழுந்தது; கூடையிலும் பூ நிறைந்திருந்தது. இவை கண்டு பரமசிவத்தின் திருவுள்ளத்தை நினைந்து வியந்து நாயனார் தொண்டு செய்வதையே தொழிலாகக் கொண்டு பல நாள் வாழ்ந்து வந்தார்.

இந்த அடியாரின் சரிதை இறைவனுக்கு சிறு அபாரதம் நேரிடினும் மெய்த்தொண்டரானவர் அதைத் தாங்கமுடியாமல் பதைத்து மெய்மறந்து சினங்கொள்வார்கள் என்பதை விளக்குவதோடு, அக்காலத்து அரசர்கள் நீதிசெலுத்திய விதத்தையும் அவர்களுக்கு அடியார்பால் இருந்த முழு நம்பிக்கையையும் காட்டுகின்றது.

உப்பின் மகிமை.

ஓய் கோபாலய்யரே, எங்கே கன வேகமாய்ப் போகிறீர்? நான் திண்ணையில் உட்கார்ந்து இருப்பதுகூட உமக்குக் கண் தெரியவில்லையோ! இப்படி சற்று வாரும், என்று ரங்கய்யங்கார் என்பவர் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கூப்பிட்டார். அவர் நல்ல கோவில் ததியோன்னமும், அக்காரவடிசலும் அருந்தி பறங்கிப் பழம்போன்ற மேனியராய் இருந்தார். கோப்பிரளயம் என்று பெயர்கொண்ட அக்கிராமத்துக்கே தலைவர் போன்று தோன்றினார். யாவரும் அவர் வாய்க்கு பயந்து அவருக்கு அடங்கி நடப்பது வழக்கம். அவர்பெருத்த சம்சாரி, நாலைந்துபிள்ளைகளும், ஒரு டஜனுக்கு குறையாத பேரன் பேத்திமார்களும் அடங்கியது அவர் குடும்பம். நல்ல பட்டுக்கரை வேஷ்டி ஆற்று ஜலத்தில் நன்றாய் தோய்த்து, உலர்த்தி இடுப்பில் கட்டியிருந்தார். நெற்றியில் தெங்கலை நாமம் பட்டையாய் பாதி மூக்கு வரையில் வால் விட்டு ஒழுங்காய் இட்டுக்கொண்டிருந்தார். வயிறு புடைக்க நன்றாய் போஜனமருந்தி, வெற்றிலை ஒரு கவுளிபோட்டு அறைத்து விட்டு, ரேழியில் சிறிது நேரம் நன்றாய் தெருக்கோடி வரையில் காது கேழ்க்கும்படியாய் குறட்டை விட்டு உறங்கி விட்டு, மெள்ள சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருந்தார். கடிகாரத்தில் மணி 2 தான் ஆகியிருந்தது. சீட்டுக்கட்டை கையில் எடுத்துக் கொண்டு வாசற்பக்கம் வந்து திண்ணையில் அமர்ந்தார். தெருவில் யார் போவார்கள், யாரை அழைக்கலாம் என்று ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில், நமது கோபாலய்யர் வீட்டை நோக்கிச்செல்ல, அவரை அய்யங்கார் அழைக்கவும், இதென்னடாசனியன், இவன் கண்ணில் அகப்பட்டுக் கொண்டோமென்று சலிப்புடன் திண்ணையை நோக்கி கோபாலய்யர் வரலானார். இவர் நல்ல பிராயம் வாய்ந்தவர். சில வருடங்களுக்கு முன்பு தான் தாசில்தாராய் இவ்வூருக்கு நியமிக்கப்பட்டு தன் சம்சாரத்துடன் அவ்விடம் வந்து வசிக்கலானார். ரங்கய்யங்காரை விரோதம் செய்துகொண்டு இவ்வூரில் பெயரெடுப்பது அசாத்தியம் என்று கேள்விப்பட்டு, நமது அய்யரும் ஒரு மாதிரியாய் அய்யங்காருடன் சிநேகிதம் செய்து கொண்டிருந்தார். இவர் நல்ல புத்திசாலி. எம். ஏ., பட்டமும் பெற்றவர். சென்ற வருடம் துரைத்தனத்தார்கள் மகாத்மா காந்தியை சிறையடைக்கவும், இவர் மனம் வெருத்து தன் வேலையை ராஜீநாமா கொடுத்து விட்டு, இத்துரைத்தனத்தின் கீழ் வேலை செய்யலாகாது என்ற கொள்கை உடையவராய், ஆங்காங்கு உபந்யாசம் செய்து கொண்டு ஸ்வராஜ்யத்திற்காக உழைத்துக்கொண்டிருந்தார்.

என்ன, அய்யங்கார்வாள்! உல்லாசமாய் உட்கார்ந்திருக்கிறாப்போலிருக்கிறது, பொழுது போகவில்லைபோலும், சீட்டாட ஆள் தேவையோ? வென,

அப்படி ஒன்றுமில்லை. வேண்டுமானால் நீர் ஓர் ஆட்டம் ஆடமாட்டீரா, உம்மோடு ஒரு விஷயம் பேசவேண்டும். ஆகையால் தான், கும்பிடப்போன தெய்வம் எதிரே வந்தாற் போல் நீர் தென்பட அழைத்தேன் என்றார்.

அப்படி என்ன விஷயம் சொல்லுங்கள் என்று கூறிக்கொண்டே அய்யர் திண்ணையில் அய்யங்காருக்கு எதிராய் உட்கார, அவசரப்படாதேயும், சொல்லுகிறேன், கட்டை கலையும் ஆடிக்கொண்டே பேசலாம் என்றார். உங்கள் பாச்சாவெல்லாம் பலிக்காமல் செய்துவிட்டான் பார்த்தீரா, என்று சொல்லத் தான் கூப்பிட்டேன். அவ்வளவு சாமர்த்தியமில்லாமலா ஆயிரம் மயில் சமுத்திரத்தைக் கடந்து நம்மை ஆள்கின்றான். இனி உங்கள் ஸ்வராஜ்ய போரும், ஒத்துழையாமையும், இந்த அமுலெல்லாம் பறந்து விடும். புத்திசாலி நல்ல வேலை செய்தான், என்று புகழ்ந்தார்.

அப்படிக்கென்ன அய்யங்கார் அவர்களே! நடந்து விட்டது, எனக்கு விளங்கும்படியாய் தயவு செய்து கூறவேண்டும். காந்தியை பிடித்து அடைத்துவிட்டான் என்று தானே சொல்லுகிறீர்? அதுதான் ஒரு வருடமாகப் போகிறதே, அதற்காக ஜனங்கள் ஒன்றும் அடங்கவில்லை. மேலும் ஆவேசங்கொண்டேதான் உழைத்து வருகிறார்கள். புதிதாக என்ன நடந்து விட்டது என்று கோபாலய்யர் பரிகசிக்க,

என்ன அய்யர்வாள் ஒரு நொடியில் என்னை பயித்தியமாய் செய்து விட்டீர்கள். தன் குழந்தை அசடு என்று யாராயினும் சொல்லிக் கொள்வார்களோ, அதுபோல் உமது சங்கத்தைப்பற்றி நீர் உயர்வாய் கூறிக்கொள்வது நியாயமே. நான் சொல்ல வந்தது பழங்கதையல்ல. எங்கே உம்மால் ஊகிக்க முடியுமோ பார்ப்போம் என்றார். அய்யர் ஒன்றும் தோன்றாமல் பசபசவென விழிக்கலானார். அய்யங்கார் குலுங்க நகைத்து, என்ன ஐயா, தலைவராய் நின்று வயிற்று சோற்றையும்விட்டு தேசபக்தியை புகட்டுகிறீர் இது தெரியவில்லையே. சமயத்திற்கு ரங்க அய்யங்கார் தான் கூற வேண்டியிருக்கிறது. கேளும் உப்பு உடம்பில் ஏற ஏறத்தான் மனிதர்களுக்கு கோபம், பொருமை, ஆசை முதலிய குணங்கள் விருத்தி அடையும் என்பது, பெரியார்களின் கொள்கை. அதை அறிந்து துரைத்தனத்தான் உப்பிற்கு வரியை உயர்த்தி அதிகமாய் ஜனங்கள் உபயோகிக்காவண்ணம் செய்து விட்டானே. இந்திரியங்கள் அடங்கி உலகப்பற்று ஒழிவதற்குத் தானே ஞானிகளெல்லாம் உப்பைத் தள்ளி காய் கிழங்குகள் அருந்துகிறார்கள். அந்த யுக்தியை அறிந்து உப்பை ஓர் அறிய வஸ்துவாய் செய்து விட்டார்கள். காலக்கிரமத்தில் நீங்களும் வீராவேசம் குன்றி ஸாத்வீக துறையில் இறங்கி விடுகிறீர்கள். தேசபக்தியும்

ஒழிந்தவிடும். சன்மார்க்கத்துக்கு குருவாகவல்லவோ துரைத்தனத்தார்கள் ஏற்பட்டு விட்டார்கள். என்ன நான் சொல்வது, எப்படித் தோன்றுகிறது என, கோபாலய்யர் அடக்க முடியாமல் கனைத்து, பேஷ்! நல்ல போடு போட்டீர். சும்மாவா, உப்மைக்கண்டால் எல்லா பயல்களும் நடுங்குகிறார்கள். உப்பின் விலை உயர்ந்துவிட்டது என்பதிற்காக இந்த உபன்யாசமோ, எனக்கு தோன்றவில்லை என்று புகழ்ந்தார்.

ஆம், ஐயா, நான் சம்சாரி எனக்குத் தெரியும் சாமான்களின் வருத்தம் என்றார் அய்யங்கார். சிறிது நேரம் அய்யங்காருடன் சீட்டாடிவிட்டு, கோபாலய்யர் வீட்டை நோக்கிச்சென்றார். அய்யங்கார் கூறியவாறே, ஜனங்கள் வயிற்றில் பலவிதமாய் மண்ணை போட்டால், தானே உற்சாகம் குறைந்து ஸ்வராஜ்ய போரெல்லாம் அடங்கிவிடுகிறது. கவுன்ஸிலில் நமது நன்மைக்காக வென்று சொல்லிக்கொண்டு வீற்றிருக்கும் பிரபுக்களெல்லாம், பிராமணர்கள், பிராமணரல்லாதார் இருவருக்குமுள்ள பொருமையை காட்டுமிடமாய் அதை செய்யாமல், தங்களிடம் நம்பிக்கை வைத்து, அளித்த ஜனங்களின் ஓட்டுக்கள் வியர்த்தமாகா வண்ணம் துரைத்தனத்தாருடன் வாதம் செய்து நம்முடைய வருமைகள் மேன் மேல் செழிக்கா வண்ணம் காப்பாற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள்.

K. R. R. சாஸ்திரி, M. A.

V.

மதுரை, பிருந்தாவனம் கோகுலம்.

ஸ்ரீ காசியிலும், ப்ரயாகையிலும் கங்கா ஸ்நானம் செய்த பிறகு இந்தியாவில் முக்கியமான ஸ்தலத்தைப் பார்த்து விட்டோம் என்றே சொல்லலாம். எனினும் த்வாபுர யுகாந்தத்தில் உலகினுக்கே துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்த ஸ்ரீ கிருஷ்ண பகவானது ஜன்ம க்ஷேத்திரமாகிய மதுராபுரி பார்க்காவிடில் என்ன பிரயோஜனம்?

மதுராபுரி போகுதல்.

யமுனை நதிக்கரையில் மதுராபுரியினமைப்பு லாவண்யமாகவே யிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் யமுனை நதியைக் கடந்து சென்ற பொழுது, இரங்கிய வி்ச்ராந்த காட்டினருகில் வருகிறோம். இது விசாலமாயும், பல ஜனங்களிறங்கி ஸ்நானம் செய்யக்கூடிய வன்மையையுமுடையது. படகில் அக்கரை சென்று, பட்டணத்தை உற்று நோக்குமிடத்துற்றான் மதுராபுரியினழகு விளங்கும்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கோயில்.

வட இந்தியாவிலுள்ள இதர க்ஷேத்திரங்களைப் போலவே, கோயிலின் கோபுரம் வெகு தூரத்திலிருந்து தென்படவில்லை. ஒரு வெளி ப்ராகாரம் மாத்திரந்தானுளது. கிருஷ்ண பகவானது விக்ரஹத்தினழகும், "ஸ்ரீ கிருஷ்ண பகவான்கி ஜேய்!" என்ற பக்த கோடிகளின் சப்தமும், என் மனதைக் கவர்ந்தன.

ப்ருந்தாவனம் போகுதல்.

அழகிய குதிரை வண்டி யிருக்கையில் ரெயில் மார்க்கமாய் ப்ருந்தாவனம் போவதற்கு மனம் வரவில்லை. போகும் வழியெல்லாம் "ப்ருந்தாவனம்" என்ற பெருக்கினங்க, துளசி செடிகளாகவே யிருபுறமும் தென்பட்டன. அங்கு மிங்கும், சில மான்களும் ஓடின. பாதையில் மான்கள் ஓடினவென்றால் அதிசயமே; இவ்வற்புதத்தை நான் கண்ணாரக்கண்டு ஆனந்திக்கையில் இருவர் துப்பாக்கி ஸஹிதம் வேட்டையாட வந்ததை இப்புரம் பார்க்கையில், இதுதானோ உலகமென்றெண்ணி இம்மகா பாதகத்தைப் பார்க்கவேண்டாமென்று என் வண்டியை வேகமாயோட்டச் சொன்னேன்.

காளிங்க மர்த்தனம்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆனந்தமாய் தம் நாட்களைக் கழித்த இந்த ப்ருந்தாவனத்தில் பளிங்குக் கல்லால் கட்டப்பட்ட ஒரு கோயிலைப் பார்த்தேன். அதனருகில் யமுனை நதிக்கரையில் காளிங்கமர்த்தன லீலை செய்தவிட மிருப்பதாக வறிந்தேன். அங்கே சில காலங்களுக்குமுன் ஒரு பெரிய அகழிருந்ததாக வதந்தி. ஒரு வட விருக்ஷத்தினடியில் பளிங்கக்கல்லில் பாலகிருஷ்ணனது பாதம் ஒன்றையும் கண்டேன்.

ஸ்ரீரங்கநாதர் கோபுரம்.

சற்று தூரத்தில், ஒரு பெரிய கோபுரத்தைப் பார்த்தேன். இங்கே இந்தக் கோபுரமேது என்று சந்தேஹிக்கையில், இது நம் தென்னிந்தியாவிலுள்ள ஒரு வைஷ்ணவ பக்தரால் கட்டப்பட்டதென்று, கோயில் மணியகார் என்னிடம் சொன்னார். கோயிலின் முன்புள்ள புஷ்கரணியும், ஸ்தூபம், வெளி ப்ராகாரம் முதலியன யாவும், நமது கோயிலிலுள்ள மாதிரியே யிருந்தன. கோயிலிலுள்ள குருக்களும், நம் ராஜதானியிலுள்ளோரே. மூலதனமதிகமா யிருப்பதால் பக்த கோடிகளுக்கு ப்ரஸாதம் திருப்தியாய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கோகுலமும் கோஸம்ரக்ஷணையும்.

பால்யத்தில், பசுக்களுடன் வேணு கானம் செய்ததும், வெண்ணை முதலிய தின்பண்டங்களில் திருவிளையாடல் செய்ததும் இவ்விடத்திலே தான். இங்கேயும் யமுனை நதிக்கரையில் கிருஷ்ண பகவான் கரையேறிய விடத்தை விச்ராந்த காட்டென்றே யழைக்கிறார்கள். நந்த கோபரது க்ரஹம் என்று ஒரு பாழ் பூமியைக் காண்பித்தார்கள். கோகுலத்திலுள்ள ஒவ்வொரு வீடும் புராண ரஹிதமானதால், ஒவ்வொரு க்ரஹத்திலும் கிருஷ்ண பகவானது உருவம் வைத்து, ஒரு திரையும் போடப்பட்டிருக்கிறது. கோஸம்ரக்ஷணைக்காக ஒரு நிதியும் இவ்விடம் வசூலிக்கப்படுகிறது. இந்தியா முழுவதும் கோஸம்ரக்ஷணை ஆரம்பிப்பதற்கேற்றவிட மிதுவே. ஸ்ரீ கிருஷ்ண பகவான் பசுக்களை மேய்த்த விடமும் சுட்டிக் காண்பிக்கப்பட்டது.

த்வாபுர யுகாந்தத்திற்றான் ஸ்ரீ கிருஷ்ண பகவானிவ்விடம் அவதரித்ததாயினும், இவ்விடத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் ஏழையாயும், வீடுகளெல்லாம் பாழாயுமிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும், பகவானவதரித்த பூமியில் அவர் வளர்ந்து திருவிளையாடல் செய்த வீட்டிலேயே நாமுமிருக்கிறோமென்றறிந்து, வெகு களிப்புற்றேன்.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அக்ஷதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாண காலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாரணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும், ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்லியாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும்; பிறகு அதே கப்பலில் வந்த சக்கிரவர்த்தி "மாமா" என்பவருடன் சிநேகமானதும்; அவருடைய விருப்பத்தின் பேரில் அவரூராகிய காஸிப்பூரில் இராமேசன் வக்கீலாய் அமர்வதென்று தீர்மானித்ததும்; காஸிப்பூர் வருமுன் இராமேசன் அத்தீர்மானத்தை மாற்ற முயன்றதும் கமலா அதற்குச் சம்மதியாது திடமனதாய் இருந்ததும், பிறகு இருவரும் காஸிப்பூர் வந்ததும் வந்தபின் கல்கத்தாவுக்குப் போய் தன் காரியங்களை முடித்துக்கொண்டு காஸிப்பூரில் வசிப்பது என்று இராமேசன் புறப்பட்டுச் சென்றதும் சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை]

கூடிய சீக்கிரத்தில் கல்கத்தாவில் தன் காரியங்களை முடித்துக்கொண்டு திரும்ப வரவேண்டும், காலு தோலாவில் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று தீர்மானித்திருந்தான் இராமேசன்.

கல்கத்தா டார்ஜிபாராவுள்ள தன் பழைய வீட்டிற்குப்போனான். பிரதிதினம் கொஞ்சந்தான் காரியம் இருந்தது. மற்றைப் பொழுதைச் செலவிடுவது கஷ்டமாயிருந்தது. தன் பழைய சிநேகிதர்களைப் போய்ப்பார்க்க அவனுக்கு மனம் வரவில்லை. அவர்களை தெருவில் காணாதிருக்கும்படியாய் ஒதுங்கிச் சஞ்சரித்தான் இராமேசன்.

ஆயினும் பழைய இடத்திற்கு வந்ததும் பழைய வழியில் நடக்கலானான். அவன் மனதும் வேறுபாடுற்றது. விசாலமான பிரதேசத்தில், கிராமாந்தரத்தில் அமைதியுற்ற வெளியிடங்களில் இருக்கும்போது கமலாவின் இளம்பிராயத்து அழகு அவன் மனதைக்கவர்ந்திருந்தது; நகரத்திற்குவந்தபின் அந்த காந்தசக்தி மழுங்கியது. "டார்ஜிப்பாரா" வீட்டில் இராமேசன் தன் கண்முன் கமலாவின் விக்கிரகத்தை தியானஞ்செய்து சந்தோஷிக்க முயன்றும் முடியவில்லை. அவளது அழகு அவன் கண்முன் எழாது போயிற்று. ஹேமநளினியைப்பற்றி நினைக்கவே கூடாது என்று அடிக்கடி இராமேசன் தனக்குள் சபதம் செய்துகொண்டான்; ஆயினும், இரவும் பகலும் அவளது ஞாபகமே அவன் மனதில் தீவரமாய் எழுந்து அவளது பிம்பமே அவன் கண்முன் தோன்றிற்று. அவன் அடிக்கடி அவளை நினைவதில்லை என்று திடமாய் தீர்மானித்தது, அவளை மறவாது நினைத்திருப்பதற்கு ஹேதுவாயிற்றே யொழிய வேறு இல்லை.

இராமேசன் மட்டும் அவசரப்பட்டுக் காரியத்தை முடிக்கக் கூடும் என்றால் அப்பொழுதே வந்த காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பப் புறப்பட்டிருக்க முடியும்; ஆனால் நாளையாகட்டும் என்று தள்ளிவைப்பவனுக்கு காரியங்கள் பெருங்காரியங்களாய் விடும்; ஆயினும் அவையும் ஒரு வழியாய் முடிவுறுமல்லவா? மறுதினம் அலஹாபாத்துக்குப்போய் அங்கிருந்து காஸிப்பூருக்குப் போவதென்று நிச்சயித்தான் இராமேசன். தான் தன் மனதை அடக்கி ஆண்டதெல்லாம் பிரயோசனமற்றுப்போக, கல்கத்தாவை விட்டுப் புறப்படுமுன் காலுதோலாவுக்கு இரகசியமாய் ஒரு தரம் போய் வருவதில் பிசகு ஒன்றும் இல்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் இராமேசன்.

அப்படி யோசனை செய்ததும், ஹேமநளினிக்கு ஒரு காகிதம் எழுத உட்கார்ந்தான். கமலாவுக்கும் தனக்குமுள்ள சம்பந்தத்தை முழுவதையும் விடாமல் விபரமாய் எழுதினான். தான் காஸிப்பூருக்குத் திரும்பச் சென்று அந்தப் பெண்ணை தன் மனைவியாக்குவதாய் தான் நினைத்திருப்பதையும் வெளியிட்டான். ஹேமாவை விட்டுக் கடைசிமுறை பிரியுமுன் தன்பழைய காதலை யெல்லாம் விஸ்தரித்து எழுதி விடைபெற்றுக் கொண்டான் இராமேசன்.

அந்த காகிதத்தை ஒரு கவரிலிட்டான்; ஆனால் உள்ளிலும் வெளியிலும் எங்குமே விலாஸம் எழுதவில்லை. அக்ஷதபாபுவின் வீட்டில் தன் கக்ஷியைச் சேர்ந்த வேலைக்காரர்கள் இருப்பார்கள். ஏனெனில், ஹேமநளினியைச் சுற்றி யிருந்தவர்களிடமெல்லாம் இராமேசனுக்குப் பிரியம்; ஏதாவது காரணங்கொண்டு அவர்களுக்கு இனாமும் வெகுமதிகளும் கொடுத்து வந்தான் அன்றோ? ஆகவே, சாயங்காலம் இருள் பரவியதும் அந்த இடத்திற்குச் சமீபமாய்ச் சென்று தூரத்தினின்றும் ஹேமநளினியைச் சற்று உற்று நோக்கியபின், அவளிடம் மெதுவாய் தன் காகிதத்தைக் கொடுக்கும்படி யாரையாவது வேலைக்காரரைக் கேட்டுக்கொள்வது; அப்புறம் இந்தப் பழைய சிநேகிதத்தை யெல்லாம் முற்றும் துறப்பது என்று நிச்சயித்தான் இராமேசன்.

இருண்டதும், உடல் நடுங்க, மனது படபடக்க, காகிதமும் கையுமாய் மறக்க வொண்ணாத அந்தத் தெருவில் நுழைந்தான் இராமேசன்; அந்தவீட்டுக் கதவு தாளிடப் பட்டிருந்தது. வீட்டில் ஒருவரும் குடியிருக்கவில்லை போலும், இருண்டிருந்தது.

கதவைத் தட்டினான்; மூன்று நாலுதரம் தட்டியதும் ஒரு வேலையாள் கதவைத் திறந்தான். "யார் அது, சுகனா?" என்றான் இராமேசன் "ஆம், ஐயா," என்றான் சுகன்.

இராமேசன்: "உங்கள் எஜமானர் எங்கே?" சுகன்: "சின்ன அம்மாளைக்கூட்டிக் கொண்டு தேக ஆரோக்கியத்திற்காக வெளியூர் போயிருக்கிறார்.

இராமேசன்: "கூட யாரேனும் போயிருக்கிறார்களோ."

சுகன்: "நளினபாபு போயிருக்கிறார்."

இராமேசன்: "யார்? இந்த நளினபாபு?"

சுகன்: "எனக்குத் தெரியாது."

சுகனிடமிருந்து நளினபாபு என்று ஒரு சிறுவயதினர் அடிக்கடி வீட்டிற்கு வருவது வழக்கம் என்று கேட்டறிந்தபோது, இராமேசபாபு ஹேமநளினி தனக்குக் கிடைப்பாள் என்ற எண்ணங்களையெல்லாம் அப்பொழுதே துறந்திருந்தான் என்றாலும், நளினபாபுவின் மீது ஒருவித பொறாமை அவன் மனதில் எழுந்தது.

"சின்ன அம்மாளுக்கு உடம்பு சௌக்கியமாய்த்தானே இருந்தது?" என்று கேட்டான் இராமேசன்.

"ஆம், சின்ன அம்பாள் உடம்புக்கு ஒன்றும் இல்லை" என்று இராமேசனைச் சந்தோஷப்படுத்துமென்று சொன்னான்; ஆனால் சுகன் எவ்வளவு தவறாய் நினைத்தான் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

"இரண்டொரு நிமிஷம் நான் மாடிக்குப் போய் இருக்கலாமா?" என்றான் இராமேசன். மண்ணெண்ணெய்க் கைலாந்தலைப் பிடித்துக்கொண்டு வழிகாட்டிச் சென்றான் சுகன்.

அறையறையாய் ஒடிப்புகுந்து பார்த்தான் இராமேசன்; பழைய ஞாபகங்கள் நிறைந்த நாற்காலி சோபாக்களில் சற்று அமர்ந்திருப்பான்; மறுபடி எழுவான். நாற்காலி, மேஜை, படுதா, படங்கள் எல்லாம் முன்போலவே இருந்தன. இந்த ஒரு நளினன் மட்டும் புதிதாய் இடையே வருவானேன்? இயற்கையின் சுபாவம் காலி இடமாய் இராதிருப்பதன்றோ, ஒன்றே வெகுகாலம் ஓரிடத்து இருக்க வொட்டாதன்றோ? அதோ இன்னும் மாறாது இராமேசன் சரத்காலத்து அஸ்தமன ஒளியில் ஹேமாவினருகில் நின்று இருவர் மனதும் ஒன்றாய்ச்சலித்த காலத்தில் விளங்கியதுபோலவே தோற்றுகின்றது. பிரதிதினமும் அஸ்தமனவேளையில் அன்றுபோல் அந்தஜன்னலின் வழியே அவ்விதமே ஒளி வீசுமன்றோ? இராமேசனுக்குப் பிரதிநிதியாய் வேறு ஒருவன் அந்த ஜன்னலண்டை நின்று இருமுகங்களும் ஒன்றை யொன்று அழகுறப்பார்க்க நிற்பதோ? பழங்காலத்தைக் காக்கும் அதிஷ்டான தேவதை அப்படி அவ்விருவரையும் சேரவொட்டாமல் இடை நின்று தடுக்காதோ? வாய்திறவாமலே அந்த தேவதை கைவிரலை நீட்டி எச்சரித்து அவர்களைத் தடுக்காதோ? இராமேசன் மனதில் இவ்வித சஞ்சலமும், தன் கௌரவமும் குன்றியது என்ற உணர்வும் மேலிட்டிருந்தன.

மறுநாள் அலகாஹபாத்திற்குப் போகாமலே, நேராக காஸிப்பூருக்கு ரயில் ஏறினான் இராமேசன்.

இராமேசன் கல்கத்தாவிலிருந்து திரும்ப வருமுன் ஒரு மாதகாலமாயிற்று. கமலா வயதுள்ள பெண்ணுக்கு, அதாவது பக்குவதசையாகையால் இக்காலத்தில், ஒருமாதம் என்பது பெரிதன்றோ? விடியற்காலத்தில் எப்படி அருணோதய வொளி திடீரென சூரியோதய பிரகாசமாகமாறுகின்றதோ, அதுபோல அவளது பெண்மையும் முளைத்தவுடன் முற்றி விகசித்தது. சைலஜாவுடன் சேர்ந்து நெருங்கிப்பழக நேரிடாவிட்டால் அவளது பெண்மை முதிர்ச்சியடைய வெகுகாலமாயிருக்கும்; ஆனால் சைலஜாவின் பிரியமாகிய இன்னொளியும் பிரேமைகளும் சூரியனது இளம் பிரகாசம் போல் அவள்மீது வீசவே, அவள் அதிசீக்கிரத்தில் வளர்ந்து மாறுபாடுற்றாள்.

ஆகவே, இராமேசன் வருவதற்குத் தாமதிக்கவே, சைலஜாவின் வற்புறுத்தலின் பேரில் "மாமா" ஒரு வீடு தேடிப்பார்த்து நிச்சயம் செய்ய முயன்றார்; அதன் பயனாக, கங்கைக்கரையோரத்தில், ஊருக்கு வெளியே சிறு பங்களா ஒன்று இராமேசனும் கமலாவும் குடியிருப்பதற்கு என்று அமர்த்தப்பட்டது. வீட்டை குடியிருப்பதற்கு யோக்கியமாகச் செய்வதற்கு வேண்டிய நாற்காலி, மேஜை முதலிய சகல சாமான்களையும் சேகரித்து வேலைக்காரர்களையும் திட்டம் செய்து குடித்தனத்திற்குத் தயாராக்குவதே காரியமாயிருந்தார் சக்கிரவர்த்தி மாமா.

இப்படியாக இராமேசன் காஸிப்பூருக்குத் திரும்ப வந்ததும், கமலாவுடன் வசிப்பதற்கும் வீடும் தயாராகவிருந்தது; இனியும் மாமாவின் தயவின் பேரில் அவளுக்கு இடைஞ்சலாய் அவருடைய வீட்டிலே தங்கியிருக்க வேண்டியதில்லை.

பங்களாவைச் சுற்றி தோட்டத்திற்குப் போதுமான பூமி இருந்தது; இரு வரிசையாய் நின்ற 'சிசு' மரங்களினிடையே உல்லாசமாய் உலவி வருவதற்கு நிழற்தங்கிய வழி யொன்று இருந்தது. அருகிலிருந்த ஆறு குளிர்காலமாகையால் சிறுத்து ஓடிற்று; வீட்டிற்கும் ஆற்றங்கரைக்கும் இடையுள்ள மணற்பாங்கான பிரதேசத்தில் கோதுமைப் பயிரும் "முலாம்" பழக்கொடிகளும் படர்ந்திருந்தன. ஆற்றங்கரைப்புறமான பங்களாத்தென்புறத்தில் ஒரு பெரிய வேப்பமரம் இருந்தது. அதனடியில் உட்காருவதற்கு மேடை கட்டப்பட்டிருந்தது.

இந்த வீட்டில் வெகுகாலமாய் யாரும் குடியிருக்கவில்லை போலும்; பூமி சரிவர பழுது பாராததால் கெட்டிருந்தது; தோட்டம் காடுபோல் சீர்குலைந்திருந்தது; அறைகள் பெருக்கப்படாமல் அழுக்கடைந்து குப்பையாயிருந்தன; ஆயினும் கமலா அதைரியப்பட்டு பின் வாங்கவில்லை. குடித்தனம் செய்யப்போகிறோம், தனி வீட்டில் யஜமானியாக இருக்கப்போகிறோம் என்ற சந்தோஷத்தில் அவள் கண்களுக்கு எல்லாம் அழகுற்றே விளங்கின. எந்த எந்த அறைகளை எவ்விதம் உபயோகப்படுத்துவது என்று ஒரு நொடியில் தீர்மானித்த பின், தோட்டத்தில் எங்கெங்கே என்னென்ன பயிர் போடுவது என்று நிச்சயித்துவிட்டு, மாமாவுடன் கலந்து தோட்டத்தை முழுமையையும் சீராக்கச்செய்தாள். சமையலறையில் அடுப்புகள் போடும்போது கூட இருந்து சரியாய்ப்போடும்படி செய்தாள். பக்கத்திலிருந்த சாமானுள்ளில் செய்யவேண்டிய ரிப்பேர்களை செய்யச் செய்தாள். இப்படி நாள் முழுவதும் சுத்தம் செய்வதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் வீட்டை சீராக்குவதிலும் முயன்று தன்னுடைய மனதை புதிய போக்கில் புகவிட்டாள்.

பெண்ணழகு வீட்டுவேலைகளைச் செய்யும் போது, அதிகம் சிறப்புற்று மனதைக் கவரும் பல விதங்களான ரூபங்களடைந்து செவ்வனே விளங்குமன்றோ! கமலா இவ்விதம் வேலைசெய்தபோது கூட்டினின்றும் விடுவிக்கப்பட்டு உற்சாகத்துடன் வானத்தில் வளையவரும் பறவைபோல் தோன்றி

ளுள் இராமேசன் கண்களுக்கு; காந்தி வீசிய அவளது அழகு வதனமும், வேலைமீது மனஞ் செலுத்த முயன்ற அவளது செய்கைத் திறனும் சாமார்த்தியமும் இராமேசனது மனதைக் கவர்ந்தது; புதிய விதமான ஒரு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் விளைத்தன. இதுதான் முதல் முதல் இராமேசன்கமலாவை வீட்டு யஜமானியாக வேலைசெய்யக் கண்டது! அப்பொழுதும் இந்தவேலையிலே பழகினவள்போல் தனக்குரிய இராஜ்ஜியத்தை அடைந்தவள்போல் பெருமை வகித்து மகிமை தாங்கி கலமா விளங்கவே அவளது அழகும் அதனால் மேம்பட்டு விளங்கியது.

"என்ன செய்கிறாய், கமலா? இதென்ன? உன் உடம்பு தாங்குமா இப்படி உழைத்தால்" என்றான் இராமேசன்.

தன் வேலையின் இடையில் சற்று நின்ற கமலா இராமேசனைப் பார்த்துக் களிப்புற்றுப் புன்னகையுடன் "இதற்கென்ன, என்னைப்பற்றிக் கவலை வேண்டாம்; இதுகூடவா முடியாது என்னால் செய்வதற்கு" என்று சொல்லிக்கொண்டே, மறுபடியும் வேலையைத் தொடங்கினாள்; தான் செய்யும் வேலையை இராமேசன் கவனித்து சந்தோஷமடைகிறான் என்று தெரிந்ததும், அதிகம் திருப்தியடைந்தாள் கமலா.

இராமேசனுக்கு கமலாவிடம் உண்டாயிருந்த காதல் மறுபடியும் அவளிடம் இழுத்து வந்தது.

"நீ இன்னும் சாப்பிட வில்லைபோலிருக்கிறதே, கமலா?" என்றான்.

"சாப்பிட்டாய்விட்டதே, அப்போதே சாப்பிட்டு விட்டேனே" என்றாள் கமலா.

இராமேசனுக்கும் அவள் சாப்பிட்டாயிற்று என்பது தெரியும். ஆயினும் கமலாவைத் தான் கவனித்து அவள்மீது தனக்கிருந்த ஆசையை வெளியிடுவதற்காக இவ்விதம் கேட்டானே யொழிய வேறுஇல்லை. அவன் அப்படி அனாவசியமாய் கேட்டும் கமலா அதிருப்தியடைய வில்லை.

பேச்சை நிறுத்தாமலிருப்பதற்காக, இராமேசன் "இந்த வேலையை யெல்லாம் தனியே செய்கிறாயே, நான் கொஞ்சம் உனக்கு ஒத்தாசை செய்யக்கூடாதா." என்றான்நல்ல வேலைக்காரர்களுக்கு ஒரு துர்க்குணம் உண்டு; மற்றவர்கள் நன்றாய் வேலை செய்ய மாட்டார்கள் என்ற அவ நம்பிக்கை. அது போல், கமலாவும் புன்னகையுடன் "இது புருஷர் செய்யும் வேலை யல்லவே, என்றாள்."

இராமேசன்:—புருஷர்களுக்குப் பொறுமை அதிகம். நான் மட்டும் ஒரு ஸ்திரீயாய் இருந்தால் நீ இப்பொழுது சொன்ன இகழ்ச்சிப் பேச்சுக்கு சண்டையுண்டாயிருக்கும்; இருக்கட்டும் 'மாமா' வை மட்டும் வேலை வாங்குகிறாயோ, நான் மட்டும் ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லை."

"அதென்னமோ? ஆனால் நீங்கள் சமையல் கட்டுக்கரியை யெல்லாம் துடைப்பதைப் பார்த்தால் எனக்கு சிரிப்புவரும் போலிருக்கிறது, நீங்கள் போங்கள்; இங்கே எல்லாம் ஒரே தூளியாயிருக்கிறது."

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலயன்.

என்கிற கொற்கைச் சிங்களவன், ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கில பாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையான நாடகம்; அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த் தமைத்தது. விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவைய்யா, பி. ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10-படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து, சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரூபா 2.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

ஒற்றுமை.

(நான்காம் வருடம்.)

இது இந்திய மக்களிடம், சகோதர நட்பு, சமரச உணர்ச்சி, ஜீவகாருண்யம், உயர்தர அறிவு, நற்குண நல்லொழுக்கத்தைப் போதிக்கும் விஷயங்கள், நாவல்கள், சரித்திரங்கள் முதலியன அடங்கிய ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

வருஷச் சந்தா முன் பணம் அனுப்புவோருக்கு அணா 12.
ஜீவிய சந்தா ரூபாய் 10-0-0.
வி. பி. மூலமாய பெருவோருக்கு ரூ. 1
வெளி நாட்டுக்கு ரூ. 1-8-0.

பி. வி. கண்ணன் அண்டு கோ,
சைதாப்பேட்டை, சென்னை.

இனாம்! இனாம்!!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல, ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படை மருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமான பல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2	0	0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3	0	0
மாதிரிப்பிரதி அணா	0	2	0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

ஆரிய சரித்திரம்.

நீதிக் கதைகள்.

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப்படங்களும் அமையப்பெற்றது, நான்காம் பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

இது வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவி, பாரதகதையை ஆதியோடந்தமாகச் சுருக்கமாகவும், கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தை விரிவாகவும் அவ்வவ்விடங்களில் சமயோசிதத்துக் கேற்ப வில்லிபுத்தூரார் அரிய பாக்களின் மேற்கோளுடனும், பள்ளியிற்பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கும், ஏனையோருக்கும் மகாபாரதக்கதை இனிது விளங்குமாறு இனிய தெள்ளிய நடையில், வித்வான் ஆறுமுக சேர்வையவர்களால் எழுதப்பட்டது. படிக்கப் படிக்க சுவையை உண்டு பண்ணும் சகல நீதிகளும் அமையப்பெற்றது.

விலை ரூ. 1—0—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

கெ. 1.	10 கஜம்	×25"	ரூ. 2½ முதல்	ரூ. 3	வரை
,, 2.	12 ,,	×27"	,, 4 ,,	6	,,
,, 3	16 ,,	×34"	,, 6 ,,	9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8 ,,	12	,,
,, 5.	20 ,,	×41"	,, 11 ,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½ முதல்	ரூ. 6	வரை
9½ ,,	× 40"	,, 3 ,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2 ,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.